# மாயவலை





42 பா.ராகவன்

சர்வதேசத் தீவிரவாதம் பற்றிய திகிலூட்டும் தொடர்

அல்காயிதாவுக்கும் ஹிஸ்புல்லாவுக்கும் அடிப்படையில் ஒரு பெரிய வித்தியாசம் இருக்கிறது. ஹிஸ்புல்லாவைப் புரிந்துகொள்வதற்கு, இந்த வித்தியாசத்தை முதலில் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியம்.

அமெரிக்கா என்றொரு தேசமே இல்லாது போயிருந்தாலும், அல்லது அமெரிக்கா ஒரு சமத்து சர்க்கரைக்கட்டி தேசமாக இருந்திருந்தாலும்கூட, அல் காயிதா தோன்றத்தான் செய்திருக்கும். வேறு எங்காவது, எதற்காவது குண்டு வெடித்துக்கொண்டுதான் இருந்திருக்கும். அமெரிக்க ஆதரவு, அப்புறம் அமெரிக்க எதிர்ப்பு எல்லாம் வருவதற்கு முன்பே, ஆப்கன் யுத்தத்தில் பங்கெடுப்பதற்காக, ஒசாமா பின்லேடன் சவூதியிலிருந்து புறப்பட்டு வந்துவிட்டதைக் கொஞ்சம் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

ஆனால், இஸ்ரேல் இல்லாது போயிருந்தால், ஹிஸ்புல்லா கண்டிப்பாகத் தோன்றியிருக்காது. இஸ்ரேல் ஒரு சமத்துக்குட்டி தேசமாக இருந்திருந்தாலும் ஹிஸ்புல்லா தோன்றியிருக்காது.

இதை இன்னும் புரியும் விதத்தில் சொல்லுவதென்றால், ஒரு தேசம் அல்லது ஒரு தேசத்தின் அரசாங்கமே தீவிரவாத இயக்கம் போல் நடந்துகொண்ட காரணத்தால், முள்ளை முள்ளால் எடுக்கும் பழம்பெரும் உத்தியைப் பயன்படுத்த முடிவு செய்து, லெபனானிய ஷியா முஸ்லிம்கள் ஹிஸ்புல்லாவைத் தோற்றுவித்தார்கள். ஹிஸ்புல்லாவின் தோற்றத்துக்கும் செயல்பாடுகளுக்கும் அவர்கள் முழ நீளப் பட்டியலெல்லாம் தந்துகொண்டிருக்கவில்லை. ஒரே வரி, ஒரே இலக்கு. இஸ்ரேலை ஒழிப்பது. அவ்வளவுதான். சொல்லிவிட்டுத்தான் ஆரம்பித்தார்கள். ஆரம்பித்த கணத்திலிருந்து இந்த வினாடிவரை ஹிஸ்புல்லா ஓயவேயில்லை.

தங்கள் லட்சியத்துக்குப் பின் இணைப்புகள் எல்லாம் கொடுத்து, வேறு காரியங்கள் எதிலும் ஈடுபட்டதுமில்லை. இன்றைக்கு காஷ்மீரில் இருந்து செயல்படும் பாகிஸ்தான் தீவிரவாத இயக்கங்களுக்கு, அல் காயிதாவின் துணையும் தோழமையும் இருப்பதாகச் செய்தி வருகிறது. உல்ஃபா போன்ற சில வடகிழக்கு மாநில இயக்கங்களுக்கு மியான்மர், தாய்லாந்தில் செயல்படும் இயக்கங்கள் சில உதவுவதாகத் தகவல் வருகிறது. எல்லா சிறிய இயக்கங்களுக்குமே எல்லா பெரிய இயக்கங்களும் ஏதோ ஓரளவில் உதவி செய்கின்றன; ஒத்துழைக்கின்றன.

ஆனால், இன்றுவரை ஹிஸ்புல்லா இஸ்ரேலுக்கு அப்பால் தன் பார்வையை நகர்த்தியதில்லை. சில அமெரிக்க இலக்குகளைக் குறிவைத்திருக்கிறார்கள். அதற்கும்கூட, இஸ்ரேலை அவர்கள் தூண்டிவிட்ட சம்பவம் ஏதோ ஒன்றுதான் காரணமாக இருந்திருக்கிறது. இந்தியா உள்பட, உலகின் பெரும்பாலான நாடுகளில் ஹிஸ்புல்லாவின் கிளை பரவியிருக்கிறது. (ரஷ்யா, சீனா, திபெத், நேபாளம், சூடான், உகாண்டா, மெக்சிகோ, போர்ச்சுக்கல் ஆகிய தேசங்களில் மட்டும் ஹிஸ்புல்லாவின் கிளைகள் இல்லை.) ஆனால், ஒருபோதும் எந்த நாட்டின் உள்விவகாரங்களிலும் ஹிஸ்புல்லா தலையிட்டது கிடையாது. அதிரடி நடவடிக்கைகளில் இறங்கியது கிடையாது. திடீர்க்

குழப்பங்கள் ஏற்படுத்தியது கிடையாது. இருக்கும் இடமே தெரியாமல்தான் இருப்பார்கள்.

அப்புறம் எதற்கு உலகம் முழுக்கக் கிளைகள்?

நிதி மற்றும் ஆள்பலம் சேர்த்தல். இதுதான் நோக்கம். தான் பரவுகிற இடங்களிலெல்லாம், எதனாலாவது பாதிக்கப்பட்ட ஏழை முஸ்லிம் மக்களுக்கு உதவுவதுதான் ஹிஸ்புல்லாவின் முதல் பணி. குறிப்பாக, எல்லைப் பகுதிகளில் வசிக்கும் மக்கள். அவர்கள் தொழில் நிமித்தமாகவோ, வேறு ஏதாவது காரணத்தாலோ, பக்கத்து நாட்டுக்குப் போக விரும்பினால், பாஸ்போர்ட், விசா கேட்காத குடியேற்றத் துறை அதிகாரிகளாகச் செயல்பட்டு, அவர்களை விரும்பும் இடங்களுக்கு அழைத்துப் போய்த் தங்கவைப்பது, உத்தியோகம் வாங்கிக்கொடுப்பது, ஒரு வேளை சோற்றுக்காவது உருப்படியாக ஏதாவது வழி பண்ணுவது.

இப்படித்தான் ஹிஸ்புல்லா ஆரம்பிக்கும். இதனால் என்ன லாபம் என்றால், படிப்பறிவில்லாத எளிய கிராம மக்களின் நம்பிக்கையை அவர்கள் உடனடியாகப் பெறுகிறார்கள். பிறகு அந்த மக்களைக் கொண்டே, இயக்கத்துக்கு நிதி சேகரிக்கத் தொடங்குகிறார்கள். துன்பத்தில் வாடும் சகோதர முஸ்லிம்களுக்கு உதவுவதற்காக என்று சொல்லி, ஒவ்வொரு கிராமத்து மக்களும் துண்டேந்தி வீதி வீதியாகப் போய் வசூல் செய்து, ஹிஸ்புல்லாவுக்கு அளிப்பார்கள்.

இது ஒரு காரியம். அடுத்த காரியம், மதரஸாக்கள் தொடங்குவது. எல்லையோர மக்களின் நம்பிக்கையைப் பெற்றுவிட்ட பிறகு, அப்பகுதிகளில் மதரஸாக்களைத் தொடங்குவார்கள். ஏழை முஸ்லிம் குழந்தைகளுக்குக் கல்வி அளிப்பதுதான் நோக்கம். ஆனால், இந்த மதரஸாக்களில், கண்டிப்பாக ஒவ்வொரு மாலை வேளைகளிலும் ஏதாவது ஆன்மிகச் சொற்பொழிவுகள் இருக்கும். உலகின் பல பாகங்களிலிருந்தும் பெரிய பெரிய மத குருக்கள் வந்து பேசுவார்கள்.

இந்தக் கூட்டங்களுக்கு வரும் இளைஞர்கள் தனியே கவனிக்கப்பட்டு, கண்காணிக்கப்படுவார்கள். தீவிர மதப்பற்றும் போராட்ட குணமும் ஆதிக்க சக்திகளின் மீதான அடிப்படைக் கோபமும் இருந்தால் போதும். உடனே தனியே அழைத்துப் பேசுவார்கள். விருப்பமுள்ளவர்கள் உடனடியாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டு, பயிற்சிக்கு அனுப்பப்படுவார்கள்.

ஹிஸ்புல்லாவின் பயிற்சி என்பது மூன்று கட்டங்களை உள்ளடக்கியது. முதலில் சித்தாந்தப் பயிற்சி. அதில் தேறினால் அரசியல் பயிற்சி. அங்கும் தேறினால் மட்டுமே ஆயுதப் பயிற்சிக்கு அனுப்புவார்கள். இந்தப் பயிற்சிகள் பெரும்பாலும் லெபனானிலேயே நடக்கும். மிகச் சில சந்தர்ப்பங்களில் மட்டும் பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, ஆஸ்திரேலியா, ஈரான் போன்ற தேசங்களில் ஆரம்பப் பயிற்சி முகாம்கள் நடத்தியிருக்கிறார்கள்.

இப்படி, புத்தம்புதிதாக இளைஞர்களைப் பிடிப்பது தவிர, கருத்துரீதியில் ஒத்துப்போகக் கூடிய பல சிறு தீவிரவாத இயக்கங்களிலிருந்தும் ஆட்களை இணைத்துக்கொள்வது உண்டு. பல்வேறு இயக்கங்களே தம் பெயரைத் துறந்து ஹிஸ்புல்லாவுடன் ஐக்கியமாகியிருக்கின்றன.

இப்படித் தேர்ந்தெடுக்கப்படும் போராளிகளுக்குப் பயிற்சிகள் முடிந்தபின், அவரவர் தேசங்களுக்கே அனுப்பப்படுவார்கள். அந்தந்த ஊர்களில் இருக்கும் ஹிஸ்புல்லாவின் கிளையில் அவர்கள் பதிவு செய்துகொண்டு, பணியாற்றுவார்கள். ஹிஸ்புல்லாவின் உலகு தழுவிய கிளைகள் அனைத்துக்கும் தேவையான பண உதவி, ஆயுத உதவிகளை ஹிஸ்புல்லா தலைமையகமே செய்து தரும். கிளைகள் உற்பத்தி செய்யும் பணம் அனைத்தும் லெபனானுக்கே அனுப்பப்படும். மத்திய அலுவலகக் கணக்குப் பிரிவிலிருந்துதான் அனைத்துக் கிளைகளுக்கும் தேவையான பணப்பட்டுவாடா செய்யப்படுமே தவிர, அவரவர் வசூலித்த பணத்தில் அல்வா வாங்கிச் சாப்பிட்டுவிட முடியாது. இந்த விஷயத்தில், ஹிஸ்புல்லா மிகவும் ஸ்டிரிக்ட்டான இயக்கம்.

ஹிஸ்புல்லா போன்ற ஓர் அமைப்புக்குப் பணத்தைக் காட்டிலும் ஆயுதங்கள்தான் பிரதானம்.

தங்களுக்குக் கிடைக்கும் பணத்தில் மூன்றில் இரண்டு பங்கை ஆயுதங்கள் வாங்கிச் சேகரிப்பதிலும் பராமரிப்பதிலுமே ஹிஸ்புல்லா செலவிடுகிறது. நவீன ரக துப்பாக்கிகள், பீரங்கிகள், ராக்கெட் லாஞ்சர்கள், போர் விமானங்களைச் சுட்டு வீழ்த்தும் டெலஸ்கோப் பீரங்கிகள், வெடி மருந்துகள், தகவல் தொடர்புக் கருவிகள், கம்ப்யூட்டர்கள் என்று ஹிஸ்புல்லா சர்வ வசதிகளையும் பெற்ற ஓர் இயக்கம்.

ஆரம்பக் காலத்தில் வெறும் நாட்டுத் துப்பாக்கிகளை மட்டுமே வைத்துக்கொண்டுதான் அவர்கள் இஸ்ரேலுக்குத் தண்ணி காட்டினார்கள். பிறகு, இஸ்ரேலிய ராணுவ முகாம்களில் புகுந்து கொள்ளையடித்தே, பல அதி நவீன அமெரிக்கத் தயாரிப்பு ஆயுதங்களைக் கைப்பற்றினார்கள். எப்போது ஈரானும் சிரியாவும் உதவ முன்வந்தனவோ, அன்று தொடங்கி ஹிஸ்புல்லாவின் ஆயுதக் கிடங்கு ஒருநாளும் வற்றி இருந்ததே இல்லை.

சோவியத் யூனியனிலிருந்து சிதறிய பல குட்டி மத்திய ஆசிய தேசங்கள்தான், ஹிஸ்புல்லாவுக்குத் தொடர்ந்து ஆயுதங்கள் வழங்கிவருகின்றன. இந்தத் தேசங்களில் இருக்கும் ஆயுத வியாபாரிகளிடமிருந்து தமது பாகிஸ்தான் மற்றும் சவூதி அரேபியக் கிளைப் பிரதிநிதிகள் மூலம் ஹிஸ்புல்லா தனக்கு வேண்டிய ஆயுதங்களைத் தடையின்றித் தருவித்துக்கொள்கிறது. இதற்கான விலையை ஹவாலா முறைப்படி செலுத்திவிடுவார்கள்.

இத்தனையும் எதற்காக என்றால், இஸ்ரேலுடன் யுத்தம் செய்வதற்காக. இஸ்ரேலுக்கு உதவும் அத்தனை பேருடனும் மல்லுக்கட்டுவதற்காக. லெபனானின் பூரண சுதந்திரத்துக்காக.

இந்த இடத்தில் கொஞ்சம் சுருக்கமாக ஹிஸ்புல்லாவுக்கும் இஸ்ரேலிய அரசுக்கும் இடையில் இருக்கும் பகையின் கதையைப் பார்த்துவிட வேண்டும். அப்போதுதான், ஹிஸ்புல்லாவின் நடவடிக்கைகளுக்கான அடிப்படைக் கோபத்தின் வேர் புரியும்.

எழுபதுகளில் லெபனான் பட்ட பாடுகள் கொஞ்சநஞ்சமல்ல. கிறிஸ்துவ அரசாங்கம், முஸ்லிம் மெஜாரிடி என்கிற எளிய காரணத்தினால் ஆரம்பித்த சிறு கைகலப்புகள், கொஞ்சம் கொஞ்சமாகப் பெரிதாகி, ஒரு பெரிய உள்நாட்டு யுத்தமாக வெடித்தது. முஸ்லிம்கள் எத்தனையோ நல்லவிதமாகக் கேட்டுப் பார்த்தும் அரசாங்கம், மக்கள் தொகைக் கணக்கெடுப்பை நடத்த மறுத்துவிட்டது. அப்படி நடத்தினால், முஸ்லிம்கள்தான் பெரும்பான்மை சமூகத்தினர் என்பது நிரூபணமாகிவிடும். கிறிஸ்துவர்கள் ஆட்சி நடத்தமுடியாமல் போய்விடும் என்கிற சூழ்நிலை. கணக்கெடுப்பைத் தள்ளிப்போட்டுக்கொண்டே வந்ததால், கைகலப்பு தவிர்க்க முடியாமல் ஆகிவிட்டது.

இந்த உள்நாட்டு யுத்தம் உச்சகட்டத்தைத் தொட்டிருந்த 1977-78 காலகட்டத்தில், ஜோர்டனிலிருந்து பி.எல்.ஓ. வேறு தெற்கு லெபனானுக்கு வந்து தஞ்சம் புகுந்தது. பி.எல்.ஓ. என்பது பாலஸ்தீனிய விடுதலை இயக்கம். எனவே, பி.எல்.ஓ. போகுமிடமெல்லாம் இஸ்ரேல் துரத்தும் என்பது வெளிப்படையான பிரச்னை.

அப்போது பி.எல்.ஓ.வின் சக்திமிக்க இயக்கங்களுள் ஒன்று அல் ஃபத்தா. யாசிர் அராபத்தே தலைமை தாங்கி வழிநடத்திய அதிபயங்கர இயக்கம். எதைச் செய்தாலும் மிகப் பெரிதாகத்தான் செய்வார்கள். ஒரு தாக்குதல் நிகழ்த்தினார்கள் என்றால், குறைந்தது ஒரு வருடத்துக்குப் பேசப்படக்கூடிய காரியமாகவே அது இருக்கும்.

அப்படித்தான் மார்ச் 11, 1978 அன்று இஸ்ரேலின் வடக்குக் கடலோர எல்லைப் பகுதியை ஒட்டிய ஒரு சாலையில், ஃபத்தா இயக்கத்தைச் சேர்ந்த சில போராளிகள், இரண்டு இஸ்ரேலியப் பேருந்துகளை வழிமறித்துக் கடத்தினார்கள். இரண்டு பேருந்துகளிலும் கணிசமான மக்கள் இருந்தார்கள்.

கடத்திய பேருந்துகளின் ஜன்னல்கள் வழியே அவர்கள் வெளியே சாலையில் நடந்துபோகும்,

வண்டிகளில் போகும் பொதுமக்களைப் பார்த்துச் சுட ஆரம்பித்தார்கள்.

அது ஹைஃபா டெல் அவிவ் நெடுஞ்சாலை. எப்போதும் கணிசமான போக்குவரத்து இருந்தபடியே இருக்கும். மிக முக்கியமான அந்தச் சாலையில், இரண்டு பேருந்துகளிலிருந்து தொடர்ந்து துப்பாக்கிக் குண்டுகள் சீறிக்கொண்டே இருந்ததில், மக்கள் மிகுந்த அச்சமும் கலக்கமும் அடைந்தார்கள். கண்ணெதிரில் 37 பேர் கொல்லப்பட்டதும் இன்னும் எண்பது பேர் படுகாயமடைந்ததும் அவர்களைத் திகிலடையச் செய்தன.

தகவல் பறந்து, இஸ்ரேலியப் படைகள் வந்து சேர்வதற்குள் இத்தனையும் நடந்துமுடிந்துவிட்டன. பிறகு இஸ்ரேலியப் படைகளுடன் ஃபத்தா இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் மோதினார்கள். எல்லாம் அந்தப் பேருந்துகளுக்குள் இருந்தபடிதான்.

ஒருவழியாக அவர்கள் தங்கள் தாக்குதலை முடித்துக்கொண்டு இறங்கித் தப்பித்துப் போனபோது, அந்தச் சாலை முழுவதும் ரத்தச் சேறாக இருந்தது.

இதற்குமேல் சும்மா இருக்க வேண்டாம் என்று இஸ்ரேல் தீர்மானித்தது. ஏற்கெனவே, லெபனானில் பாலஸ்தீன் அகதிகள் வந்து தங்கியிருப்பது (கொஞ்சநஞ்சமல்ல. மூன்று லட்சம் பேர்!) இஸ்ரேலின் கண்களை உறுத்திக்கொண்டே இருந்தது. இதை ஒரு சாக்காக வைத்து, லெபனானை ஒரு வழி பண்ணிவிடலாம் என்று முடிவு செய்தார்கள்.

நான்கே நாள் இடைவெளி. இஸ்ரேல் ராணுவத்தின் ஒரு பெரிய பிரிவை லெபனானுக்குள் ஊடுருவ அனுப்பினார்கள். இந்த ஊடுருவல் என்பது ஒரு பிள்ளையார் சுழி மாதிரிதான். உள்ளே புகுந்து ஆக்கிரமிப்பது என்பதுதான் நோக்கம். முழு லெபனானையும் முடியாவிட்டாலும் தெற்கு லெபனானை மட்டுமாவது.

ஆப்பரேஷன் லிட்டானி (Operation Litani) என்று திட்டத்துக்குப் பெயரிடப்பட்டது. லிட்டானி என்பது லெபனானில் ஓடுகிற ஒரு நதி. அந்த நதியின் தெற்குக் கரை முழுவதையும், முதல் கட்டமாகக் கைப்பற்றி விடவேண்டும் என்பதுதான் இஸ்ரேலின் நோக்கம். படையைக் கொண்டுவந்துவிட்ட பிறகு, அவர்கள் ராகுகாலம், எமகண்டமெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கவில்லை. அடி அடி என்று அடித்து நொறுக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

லிட்டானி நதியே ரத்த நதியாக மாறிய தருணம் அது. பி.எல்.ஓ.வைத் தாக்குகிறேன் பேர்வழி என்று ஆரம்பித்து, தெற்கு லெபனான் முழுவதையும் இஸ்ரேல் கபளீகரம் பண்ணிவிட்டது.

ஏற்கெனவே, உள்நாட்டு யுத்தத்தால் நிலைகுலைந்து போயிருந்த லெபனான், தன் தெற்குப் பகுதி முழுவதையும் இஸ்ரேலிடம் தாரைவார்த்துவிட்டுச் செய்வதறியாமல் கையைப் பிசைய ஆரம்பித்தது.

அதுதான். அந்தக் கோபம்தான் ஆரம்பம். தெற்கு லெபனானை இஸ்ரேலிடமிருந்து மீட்கவேண்டும். இஸ்ரேல் என்றில்லாமல் எந்த ஓர் அன்னிய சக்தியும் லெபனானைப் பங்குபோட அனுமதிக்கக் கூடாது. லெபனானை ஒரு முழுமையான இஸ்லாமிய தேசமாக ஆக்கி, ஈரானில் கொமேனி சாதித்த காரியங்களை இங்கும் சாதிக்க வேண்டும்.

இப்படி உறுதி எடுத்துக்கொண்ட பிறகு பிறந்ததுதான் ஹிஸ்புல்லா.